புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635
T/TN/2026/0316/6130/1505


# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்


நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 272 | 07-04-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 01 | Issue: 272 | 07-04-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry





## மணப்பாறை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் பி. எல். விஜயகுமார் மேல தாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார்.





மணப்பாறை , ஏப்.7–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் பி எல். விஜயகுமார் திங்கள் கிழமை காலை 7 மணி முதல் மருங்காபுரி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் தனது தேர்தல் பரப்புரையை தொடங்கி மதியம் 12 மணியளவில் மணப்பாறை அருள்மிகு முனியப்பன் கோவிலில் சிறப்பு அபிஷேகம் ஆரதனை நடைபெற்றுது

பின்னர் தந்தை பெரியார் சிலையிலிருந்து அதிமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தாரை தப்பட்டை முழங்க ஆட்டம் பாட்டத்துடன் ஊர்வலமாக புறப்பட்டு மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ஜெயசித்ரகலவிடம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி அதிமுக பொருப்பாளரும் முன்னால் எம். பி.யுமான டி.ரத்தினவேல் முன்னால் எம். எல். ஏ ஆர்.சந்திரசேகர் செ.

சின்னச்சாமி பாஜக மாவட்ட தலைவர் அஞ்சாநெஞ்சன் மற்றும் கூட்டணி கட்சியினர் முன்னிலையில் வேட்பாளர் டாக்டர் பி. எல். விஜயகுமார் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

வேட்பு மனு தாக்கல் செய்த பின் வேட்பாளர் டாக்டர் பி. எல் விஜயகுமார் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார் பின்னர்

திறந்த வேனில் நின்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு கேட்டு தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்



மணப்பாறை சட்ட மன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் பி. எல். விஜயகுமார் தனது வேட்பு மனுவை முன்னால் எம்.பி. டி. ரத்தினவேல் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் தேர்தல் நடத்தும் அலுவலர் ஜெயசித்ரகலாவிடம் வழங்கினார்





புதுச்சேரி ஏழை மக்கள் கழகம் சார்பில் தேசிய ஜனநாயக கூட்டனி வெற்றி வேட்ப்பாளர் A.ஜான்குமார் அவர்களுக்கு முதலியார்பேட்டை தொகுதியில் ஏழை மக்கள் கழகம் கடுமையாக வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்து வருக்கின்றனர் உடன் முதலியார்பேட்டை தொகுதி வெற்றி வேட்ப்பாளர் திரு ஜான்குமார் மற்றும் ஏழை மக்கள் கழகம் மாநில மாவட்ட தொகுதி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகறிப்பில் இடுபட்டனர் உடன் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன்

## பேரம்பாக்கம் பகுதியில் திருவள்ளூர் சட்டமன்ற திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பரப்புரை



திருவள்ளூர் ஏப் 07 :

திருவள்ளூர் சட்டமன்ற திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து பேரம்பாக்கம் பகுதியில் தேமுதிக பொது செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பரப்புரையில் ஈடுபட்டார். அப்போது பேசிய அவர், திருவள்ளூர் தொகுதி தமிழகத்தில் முதன்மை தொகுதியாக மாற்றுவோம்.

திருவள்ளூர் தொகுதி அமோக வெற்றி பெறும், வி.ஜி. ராஜேந்திரன் எம்எல்ஏ மட்டுமல்ல, அமைச்சராகவும் வருவார் எனவும், தேர்தல் அறிவிப்பு புத்தகத்தை பரப்புரை வாகனத்திலேயே வைத்துள்ளதாகவும் 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் சரிசமமாக அனைவருக்கும் வழங்கப்படும் எனவும், பெண்களுக்கு ரூ.2000 சரிசமமாக தரப்படும் எனவும், காலை உணவு, மதிய உணவு வழங்கப்படுகிறது.

இரவு உணவு மட்டும் நீங்கள் வழங்கினால் போதும் எனவும், திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பால், மின், பேருந்து கட்டணங்கள் உயராது எனவும், எதிர்கட்சிக்கு ஓட்டு போட்டால் பிரட்ஜ் தருவோம் என்கிறார், யார் வீட்டில் பிரட்ஜ் இல்லை, ஆகையால் உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

## திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் டாக்டர் அருண் குமார் வேட்பு மனு தாக்கல் :

திருவள்ளூர் ஏப் 07 : திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் திமுக, அதிமுக, தமிழக வெற்றி கழகம், நாம் தமிழர் கட்சி போன்ற பல்வேறு அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இந்நிலையில் வேட்புமனு தாக்கல் தொடங்கிய நிலையில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் டாக்டர் அருண் குமார்



தனது வேட்பு மனுவை தாக்கல் செய்ய வருகை தந்தார்.

அவருடன் முன்னாள் நகர்மன்ற தலைவர் கமாண்டோ பாஸ்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர். வேட்புமனுக்களை அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகு அதனை திருவள்ளூர் தேர்தல் நடத்தும் அலுவலர் ரவிச்சந்திரனிடம் மனுவை தாக்கல் செய்தார்.

ஏற்கனவே ஆண்ட மற்றும் ஆளும் கட்சி போட்டியிடும் சூழ்நிலையில் புதிதாக தொடங்கப்பட்ட நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் முதல் முறையாக தேர்தல் களத்தை சந்திக்கிறது. மக்கள் மாற்றத்தை விரும்புவதால் தமிழக வெற்றி கழகத்திற்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக அக்கட்சியினர் தெரிவிக்கின்றனர். தீவிரமாக பிரச்சாரம் மேற்கொண்டு டாக்டர் அருண் குமார் வெற்றி பெற பாடுபடுவோம் எனவும் தொண்டர்கள் தெரிவித்தனர்.

## அதிமுகவில் வெடித்த சர்ச்சை.

## சேலத்தில் வேட்பாளருக்குச் செருப்பு சுமந்த உதவியாளர் ஆணவமா?



சேலம். ஏப்.7–

பரபரப்பான 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில், சேலம் தெற்குத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் வினோத் வேட்புமனு தாக்கல் செய்ய வந்தபோது, அவரது உதவியாளர் செருப்பைச் சுமந்து வந்த சம்பவம் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது சொந்தத் தொகுதியான எடப்பாடியில் இன்று மனுத் தாக்கல் செய்ய உள்ள நிலையில், சேலத்தில் கட்சியின் உள்கட்சிப் பூசல் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பாக, சேலம் தெற்குத் தொகுதிப் பொறுப்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ சிங்காரத்தை ஓரங்கட்டிய சிட்டிங் எம்.எல்.ஏ பாலசுப்பிரமணியம் தரப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில், வினோத் தரப்பினர் பெரும் கூட்டத்தைத் திரட்டித் தங்களது பலத்தை நிரூபித்தனர்.

கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்குத் தனது குடும்பத்தினருடன் வேட்புமனு தாக்கல் செய்ய வந்த வினோத், அலுவலகத்திற்குள் நுழையும்போது காலில் செருப்பு அணியாமல் வந்துள்ளார். மனுத் தாக்கல் செய்யும் புனிதமான இடமாகக் கருதி அவர் அவ்வாறு வந்தாரா அல்லது அவசரத்தில் வந்தாரா எனத் தெரியவில்லை. ஆனால், அவர் உள்ளே சென்ற சில நிமிடங்களிலேயே அவரது உதவியாளர் ஒருவர் ஒரு பிளாஸ்டிக் கவரில் சுற்றப்பட்ட செருப்பை கையில் ஏந்தியபடி பதற்றத்துடன் அலுவலகத்திற்குள் ஓடிவந்தார்.

வாசல் கேட்டில் நின்றிருந்த போலீசார் அந்த உதவியாளரைத் தடுத்து நிறுத்தி விசாரித்த போது, "வேட் பாளருக்குச் செருப்பு கொண்டு போகிறேன்" என்று அவர் கூறியுள்ளார். இதையடுத்து போலீசார் அவரை உள்ளே அனுமதித்தனர். உள்ளே சென்ற உதவியாளர், கவரில் இருந்த செருப்பை எடுத்து மிகவும் பவ்யமாக வேட்பாளர் வினோத் முன்னால் வைக்க, அதனை அவர் அணிந்து கொண்டு சென்றார். உள்கட்சி மோதல்களுக்கு இடையே பலத்தைக் காட்ட நினைத்த வேட்பாளர், 'செருப்பு விவகாரத்தால்' தற்போது சமூக வலைதளங்களில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளார்.



திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியம் லஞ்சமேடுஅருகே காரில் 3000 வீதம் 26 மருந்து கவரில் மொத்தம் 78,000 ரொக்க பணத்தை பறிதமுதல் செய்த பிரேமா தலைமையிலான SST பறக்கும் படையினர் பறிமுதல் செய்து தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

## வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் உலக கவிதைத் திருவிழா...!



வந்தவாசி, ஏப் 07:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் உலக கவிதை தினத்தை யொட்டி கவிஞர்கள் பங்கேற்ற கவிதை திருவிழா ரோட்டரி கிளப் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா தலைமை தாங்கினார். துணைத் தலைவர்கள் கவிஞர் முகமது அப்துல்லா, எ.தேவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் இரா. பாஸ்கரன் வரவேற்றார்.

கவியரங்கத்தின் நடுவராக சாகித்திய அகாதெமி பால புரஸ்கார் விருது பெற்ற கவிஞர் மு.முருகேஷ் பங்கேற்று, கவிதைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை பற்றியும், கவிதைகளின் தன்மைகள் குறித்தும் விளக்கினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற 30 க்கும்



மேற்பட்ட கவிஞர்களுக்கு விருதுகள் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கவிஞர்கள் பூங்குயில் சிவக்குமார், காவல்துறை மாகதிரொளி, வந்தைபிரேம், எ.ராஜ்குமார், தலைமை ஆசிரியர்கள் க.வாசு, இரா. அருள்ஜோதி, க.சங்கர், ரயில்வே சு.தனசேகரன், நூலகர் ஜா.தமீம், கேப்டன் பிரபாகரன், சமூக ஆர்வலர் மலர் சாதிக், ஆசிரியை பா.ஜெயசுதா, பெசக்திவேல், கவிஞர்கள் அ.ஷமீமா, சைதானி உள்ளிட்ட கவிஞர்கள் பங்கேற்று கவிதைகளை வாசித்தனர். மேலும் சென்னையில் இருந்து வந்த கு.அசோகன், க.குண சேகரன், ந.வேலாயுதம், அன்புத்தோழி ஜெய ஸ்ரீ, பாரதிராஜா, சஞ்சீவி மோகன், ரகுநாத், பாபு சசிதரன் உள்ளிட்டோர் சிறப்பு கவிதைகளை வாசித்தனர். முன்னதாக, தென்னாங்கூர் ரஜினியின் தமிழிசை பாடல்கள் பாடப்பட்டது. நிகழ்வை சங்க துணைத் தலைவர் பா.சீனிவாசன் தொகுத்து வழங்கினார். இறுதியில் சங்க உறுப்பினர் ம.சுரேஷ்பாபு நன்றி கூறினார்.

## சேலம்,வாழப்பாடியில் பெத்த மகனையே துடிதுடிக்க தீர்த்துக்கட்டிய தாய் : அதிரவைக்கும் காரணம்.



சேலம். ஏப்.7–

சேலம்,வாழப்பாடி அருகே மகனை தாய் கல்லால் தாக்கியதால் கொலை செய்த தாய் கைது செய்யப்பட்டார்.

வாழப்பாடி அருகே துக்கியாம் பாளையம் கிழக்கு காட்டு பகுதியைச் சேர்ந்த சின்னப்பன் மகன் மணிகண்டன்( 30).

இவர் கட்டிட கொத்து வேலையில் மேஸ்திரியாக வேலை பார்த்து கொண்டு இருந்தவர். இவருக்கு கொட்டவாடி பகுதியைச் சேர்ந்த வினோதினி (28) என்ற பெண்ணை 10 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு கிருத்திகா (9) என்ற மனைவி உள்ளனர், இவர்களது மகன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்ட நிலையில், கடந்த சில மாதங்களாக மனைவியுடன் கொட்டவாடியில் மனைவியின் அப்பா வீட்டில் வசித்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 20 ஆம் தேதி முதல் எந்த ஒரு போன் காலும் வராததாலும், 22 ஆம் தேதி போன் சுவிட்ச் ஆப் செய்துள்ளதாலும் மனைவிக்கு சந்தேகம் எழுந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் மனைவி பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் கடந்த 142026 ஆம் தேதி வாழப்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் மணிகண்டன் மாயமாகியதாக வாழப்பாடி போலீசார் வழக்கு பதிவு செய்து போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வந்தனர். மேலும் அவரது தாய் ஜோதி, தந்தை சின்னப்பன் ஆகியோரை அழைத்து விசாரணை செய்ததில் கடந்த 23ஆம் தேதி தாய்க்கும், மகனுக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், மேலும் தாயிடம் குடிக்க பணம் கேட்டு தகராறு ஈடுபட்டதாகவும், பணம் இல்லை என்று மகனை தள்ளி விட்டதாகவும், கீழே விழுந்ததில் தலையில் பின்புறம் அடிபட்டு சம்பவ இடத்திலே இறந்ததாகவும், பின்பு தாயும் தந்தையும் அருகில் உள்ள வீரமுத்து என்பவர் உதவியுடன் தனது பாக்கு தோட்டத்தில் புதைத்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து வாழப்பாடி டிஎஸ்பி சபரிநாதன் வாழப்பாடி இன்ஸ்பெக்டர் வேல்முருகன் உள்ளிட்ட போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மருத்துவ குழுவினர் சேலம் உடற்கூறு ஆய்வு நிபுணர் கோகுல்ராஜ் சம்பவ இடத்தில் பிரேத பரிசோதனை செய்தனர். இதில் இதில் வாழப்பாடி டிஎஸ்பி சபரிநாதன் வாழப்பாடி வட்டாட்சியர் நாகலட்சுமி உள்ளிட்ட வருவாய் துறை மற்றும் போலீசார் சுகாதாரத் துறையினர் உடன் இருந்தனர் . இந்த வழக்கில் தாய் ஜோதியை வாழப்பாடி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



# புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் பாஜக தேர்தல் வாக்குறுதிப் பத்திரத்தை வெளியிட்டார் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா




புதுச்சேரி,ஏப். 7

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, பாரதிய ஜனதா கட்சியின் (பாஜக) தேர்தல் வாக்குறுதிப் பத்திரம் நேற்று வெளியிடப்பட்டது. புதுச்சேரியில் நடைபெற்ற சிறப்பு விழாவில், மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா அவர்கள் கலந்து கொண்டு இந்த வாக்குறுதிப் பத்திரத்தை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார்.

இந்த நிகழ்வின் போது புதுச்சேரி மாநில பாஜக தலைவர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

"புதுவை மலரட்டும், நல்லாட்சி தொடரட்டும்" என்ற முழக்கத்துடன், மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலனை முன்னிறுத்தி பல்வேறு வாக்குறுதிகள் இந்தத் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# வில்லியனூர் தொகுதியில் என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர் ரவிக்குமாரை ஆதரித்து முதலமைச்சர் ரங்கசாமி தீவிர பிரச்சாரம்



புதுச்சேரி, ஏப். 7

வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர் ரவிக்குமாரை ஆதரித்து, புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி தொகுதி முழுவதும் திறந்த வாகனத்தில் சென்று 'ஜக்கு' சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பிரச்சாரத்தின் போது வாக்காளர்கள் மத்தியில் முதலமைச்சர் ரங்கசாமி பேசியதாவது:

முக்கிய அம்சங்கள்: அனுபவம் வாய்ந்த வேட்பாளர்: வில்லியனூர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ரவிக்குமார் ஏற்கனவே அரசு பதவியில் இருந்தவர்.

ஒரு பணியை எப்படிச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். அவருக்கு வாக்களிப்பதன் மூலம் வில்லியனூர் தொகுதியை ஒரு சிறந்த தொகுதியாக மாற்ற முடியும்.

உள்கட்டமைப்பு மேம்பாடு: "பெரிய கோவில் நகரம்" என்று சொல்லக்கூடிய அளவிற்கு வில்லியனூர் மேம்படுத்தப்படும். சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை அவர் கொண்டு வருவார்.

மத்திய அரசின் ஒத்துழைப்பு: கடந்த 5 ஆண்டுகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது. மத்திய அரசிடம் இருந்து அதிக நிதிகளைப் பெற்று உள்கட்டமைப்புப் பணிகளைச் செய்து வருகிறோம்.

மக்களின் முடிவு: ஆட்சித் தொடர வேண்டுமா அல்லது ஆளுநருடன் சண்டை போடும் ஆட்சி வேண்டுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். நலத்திட்டங்களைச் செய்யும் அரசு மீண்டும் அமைய தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்.

முடிவுரை: "நான்தான் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்பேன். ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வாக இவர் இருந்தால் தொகுதி வளர்ச்சிக்குத் தனி கவனம் செலுத்தப்படும். எனவே, ரவிக்குமாரை பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள்" என்று முதலமைச்சர் ரங்கசாமி வேண்டுகோள் விடுத்தார்.

இப்பிரச்சாரத்தின் போது மேற்கு மாவட்ட என்.ஆர். காங்கிரஸ் தலைவர் பாலமுருகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# புதுச்சேரி அரியாங்குப்பம் தொகுதியில் என்.ஆர்.காங். வேட்பாளர் ஐயப்பன் தீவிர வாக்கு சேகரிப்பு!



புதுச்சேரி | ஏப்ரல்7

புதுச்சேரி அரியாங்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் ஐயப்பன், நேற்று தனது தேர்தல் பிரச்சாரத்தை விறுவிறுப்பாக மேற்கொண்டார்.

வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டல்:

தொகுதிக்குட்பட்ட சொர்ணா நகர் பகுதியில் வேட்பாளர் ஐயப்பன் அவர்கள் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்தார். அப்போது அவர் அங்கிருந்த முதியவர்கள் மற்றும் பொதுமக்களிடம் ஆசி பெற்று, 'ஜக்கு' (Jug) சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு: இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வின் போது என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர் பிருத்திவிராஜ் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் உடனிருந்தனர். செல்லும் இடமெல்லாம் பொது மக்களிடையே வேட்பாளருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# பிரபல சினிமா இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனனுக்கு எதிரான வருமான வரி வழக்கு ரத்து

சென்னை: எப்.7–

பிரபல சினிமா இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனனுக்கு எதிரான வருமான வரி வழக்கை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 201314ம் நிதியாண்டில் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்யவில்லை என கூறி 2019ல் வருமான வரித்துறை வழக்கு பதிவு செய்தது



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 யை முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணைய சிறப்பு பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் முன்னிலையில் திருவள்ளூர் மாவட்ட பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர்கள், உதவி செலவின பார்வையாளர்கள் மற்றும் வருமான வரித்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் ஆவடி மாநகர காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா,உதவி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட வருவாய் அலுவலருமான ச.சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ.ஸ்ரீராம் மற்றும் பல்துறை சார்ந்த முதல் நிலை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாற்றத்தை தேடி மக்களை நேரில் நாடி



மணப்பாறை தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ஆர்.கதிரவன் தேர்தல் பிரச்சாரத்தின் போது டீ கடையில் டீ போட்டும் சமோசா செய்தும் விசில் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

# தெலுங்கில் பேசி வாக்கு சேகரித்த கே.பி.முனுசாமி: 6 மாதத்தில் கற்றுக்கொள்வதாக உறுதி

கிருஷ்ணகிரி: ஏப்.7–

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கே.பி.முனுசாமி கிராமம், கிராமமாக சென்று வாக்கு சேகரித்து வருகிறார். நேற்று முன்தினம் ஏ.செட்டிப்பள்ளி கிராமத்தில் கே.பி.முனுசாமி திறந்த ஜீப்பில் நின்று வாக்கு சேகரித்தார். வேப்பனஹள்ளி தொகுதியில் தெலுங்கு பேசும் மக்கள் அதிக அளவில் இருப்பதால், அப்பகுதி மக்களிடம் தெலுங்கு மொழியில் பேசி வாக்கு சேகரித்தார்.

அப்போது தெலுங்கு மொழியில் அனைவரும் நலமாக இருக்கிறீர்களா?. சந்தோஷமாக இருக்கிறது. பெரியவர்கள் நீங்கள் தெலுங்கில் பேசுங்கள் என சொல்லுகிறார்கள். நானும் தெலுங்கில் பேசுகிறேன். இன்னும் 6 மாதங்களில் முழுமையாக கற்றுக் கொள்கிறேன். அதன் பிறகு முழுமையாக உங்களுடன் தெலுங்கில் பேசுகிறேன் என பேசினார். அவர் தமிழிலும், தெலுங்கிலும் மாறி மாறி பேசினார். இதனை அங்கிருந்தவர்கள் கைதட்டி வரவேற்று உற்சாகப்படுத்தினர்.

# வலிப்பு வந்த போதும் பேருந்தை லாவகமாக நிறுத்தி பயணிகளை பாதுகாத்த அரசு பேருந்து ஓட்டுநர்...

குளித்தலை பெரியபாலத்தில் அரசு பேருந்து ஓட்டுநர் ஒருவர் திடீரென தனது வலிப்பு ஏற்பட்ட நிலையிலும், தான் இயக்கி வந்த பேருந்தை லாவகமாக நிறுத்தி குறிப்பிட்ட பேருந்தில் பயணித்த பயணிகளின் உயிரை காப்பற்றி பலரையும் நெகிழ வைத்து உள்ளார்.

கரூர் மாவட்டம் குளித்தலை பெரியபாலத்தில் போலீசார் அணிவகுப்பு பேரணிக்கு தயார் நிலையில் இருந்தனர். அப்போது ஈரோட்டில் இருந்து கரூர் மாவட்டம் குளித்தலை வழியாக திருச்சி நோக்கி அரசு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

இந்த பேருந்தை இயக்கி வந்த அரசு பேருந்து ஓட்டுனருக்கு திடீரென வலிப்பு நோய் ஏற்பட்டது. உடனடியாக சுதாரித்து கொண்ட அந்த அரசு பேருந்து ஓட்டுநர், தனக்கு ஏற்பட்ட வலிப்பு மிகவும் தீவிரமாகும் முன்பே தான் இயக்கி வந்த பேருந்தை பழத்தில் பாதுகாப்பாக ஓரம்கட்டி நிறுத்தினார். ஓட்டுனரின் நிலையை கண்டு கூச்சலிட்ட பயணிகளின் சத்தத்தை கேட்டு அருகில் இருந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

இதனை தொடர்ந்து ஓட்டுநரை பேருந்தில் இருந்து கீழே இறக்கிய போலீசார், அவருக்கு உரிய முதலுதவி சிகிச்சை அளித்து உடனடியாக அருகில் இருக்கும் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். பின்னர் குறிப்பிட்ட பேருந்தில் வந்த பயணிகளை மாற்று பேருந்து மூலம் அவர்கள் செல்லும் இடங்களுக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

எதிர்பாராமல் வலிப்பு நோய் வந்த போதும் லாவகமாக பேருந்தை நிறுத்தி தங்களை பாதுகாத்த அரசு பேருந்து ஓட்டுனரை, அந்த பேருந்தில் பயணித்த பயணிகள் வெகுவாக பாராட்டினர். திடீரென வலிப்பால் பாதிக்கப்பட்டாலும் பயணிகளின் உயிரை காப்பாற்ற முக்கியத்துவம் கொடுத்த அரசுப் பேருந்து ஓட்டுநரின் பெயர் வெங்கடாஜலபதி என தெரிய வந்துள்ளது. இவர் சுதாரித்து பேருந்தை நிறுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது என்று பயணிகள் கூறினர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# புதுச்சேரி வந்த எடப்பாடி பழனிசாமியுடன் லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் சந்திப்பு!



புதுச்சேரி: ஏப்.7–

தமிழகத்தின் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களை ஆதரித்துத் தேர்தல் பரப்புரை மேற்கொள்வதற்காகத் தமிழக முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் புதுச்சேரிக்கு வருகை தந்தார்.

மரியாதை நிமித்தமான சந்திப்பு: புதுச்சேரிக்கு வருகை தந்த எடப்பாடி பழனிசாமி அவர்களை, லட்சிய ஜனநாயகக் கட்சி (Lajaka) தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் நேரில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பாக அமைந்தது.

வாழ்த்துக்களும் ஆலோசனைகளும்: இந்தச் சந்திப்பின் போது ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள், எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

மலர்க்கொத்து வழங்கி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து, புதுச்சேரி வளர்ச்சித் திட்டங்கள் குறித்த புத்தகங்களை வழங்கினார். மேலும், தனது அரசியல் பார்வைகள் மற்றும் வருங்காலத் திட்டங்கள் குறித்து எடப்பாடி பழனிசாமி அவர்களிடம் விரிவாக எடுத்துரைத்து அவரிடம் வாழ்த்துக்களைப் பெற்றார்.

உடன் இருந்த முக்கியப் பிரமுகர்கள்: இந்தச் சந்திப்பின் போது அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ரிச்சர்ட் ஜான் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# அதிமுக வேட்பாளர் வேட்பு மனு தாக்கல்



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் தேசிய முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் பெரியார் நகர் இரா. மனோகரன் தனது வேட்பு மனுவை நேற்று ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அலுவலர் அரபி த் ஜெயின் இடம் தாக்கல் செய்தார். அவருடன் முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம், முன்னாள் எம்எல்ஏ கே எஸ் தென்னரசு, பாஜக தெற்கு மாவட்ட தலைவர் எஸ் எம் செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# காங்கிரஸ் வேட்பாளர் வேட்பு மனு தாக்கல்



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற ஜனநாயக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடும், பி. கோபிநாத் பழனியப்பன் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தபோது ஈரோடு கிழக்கு தொகுதியின் வளர்ச்சிக்கு பாடுபடுவேன் என தெரிவித்தார். அவருடன் திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# அன்புமணி, எல்.கே.சுதிஷ், திருச்சி சிவா உட்பட 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்பு

புதுடெல்லி: ஏப்.7–

தமிழகத்தைச் சேர்ந்த அன்புமணி, எல்.கே.சுதிஷ், திருச்சி சிவா உட்பட 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக நேற்று பதவியேற்றனர்.

மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் முன்னிலையில், இந்த பதவியேற்பு விழா நடைபெற்றது. அப்போது, மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் இருந்து ஆறு பேர், மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்கத்தில் இருந்து தலா ஐந்து பேர், ஒடிசாவில் இருந்து மூன்று பேர் என மொத்தம் 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.




தமிழகத்தைச் சேர்ந்த தம்பிதுரை (அதிமுக), அன்புமணி ராமதாஸ் (பாமக), திருச்சி சிவா (திமுக), எல்.கே. சுதிஷ் (தேமுதிக), கிறிஸ்டோபர் மாணிக்கம் (காங்கிரஸ்), கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (திமுக) ஆகியோர் தமிழகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

மகாராஷ்டிராவில் இருந்து சரத் பவார் (தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்) கட்சி), மாயா சிந்தமான் இவ்னேட்(பாஜக), ராம்ராவ் சக்காரம் வட்குடே (பாஜக), ஜோதி நாக்நாத் வாக்மாரே (சிவ சேனா), மத்திய அமைச்சர் ராம்தாஸ் அதாவலே (இந்திய குடியரசு கட்சி(அதாவலே)) ஆகிய ஐவர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

மேற்கு வங்கத்தில் இருந்து பாபுல் சுப்ரியா பரல்(திரிணமூல் காங்கிரஸ்), விஸ்வஜித் சின்ஹா (பாஜக), மேனகா குருசாமி (திரிணமூல் காங்கிரஸ்), ராஜிவ் குமார் (திரிணமூல் காங்கிரஸ்), ருக்மணி மல்லிக் (திரிணமூல் காங்கிரஸ்) ஆகிய 5 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

மேலும், ஒடிசாவைச் சேர்ந்த மன்மோகன் சமல் (பாஜக), சன்ருப்ட் மிஸ்ரா (பிஜேடி), திலிப் குமார் ரே (சுயேட்சை) ஆகிய மூவர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர். உறுப்பினர்கள் பெரும்பாலும் தங்கள் தாய்மொழியிலேயே உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் வாழ்த்து தெரிவித்தார்.




# ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் சு. முத்துசாமி தீவிர தேர்தல் பிரச்சாரம்..

## அனைத்து தரப்பு மக்களிடமும் பெருகி வரும் ஆதரவு..



ஈரோடு. ஏப்ரல். 07

ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் திமுக கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் அமைச்சர் சு. சாமி தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார். தொகுதி முழுவதும் ஆதரவு பெருகி வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் இம்மாதம் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அடுத்த மாதம் மே 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு தமிழகத்தில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியும், அதிமுக, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணியும் கூட்டணி அமைத்து தங்களின் வேட்பாளர்களை களத்தில் இறக்கிவிட்டுள்ளது.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம், ஈரோடு மேற்கு தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளராக போட்டியிடும் அமைச்சர் சு. முத்துசாமி போட்டியிருக்கிறார்.

இவர் தான் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை தீவிர தேர்தல் பிரச்சாரத்தை தொகுதி முழுவதும் செய்தி வருகிறார். இவருக்கு தொகுதியில் உள்ள பலதரப்பட்ட மக்களும் பல்வேறு அமைப்புகளும் தங்களின் ஆதரவை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நேற்று திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமி சூரம்பட்டி பகுதியில் உள்ள 32 வது வார்டு பகுதியில் தனது தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

அப்போது அவருக்கு அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஆரத்தி எடுத்தும், மாலை அணிவிக்கும், மலர் தோவியம் அன்போடு வரவேற்றனர்.

அப்பகுதியை சேர்ந்த இஸ்லாமிய பெண்கள் அமைப்புகள் அவரை நேரில் சந்தித்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

பிரச்சாரத்தின் போது வேட்பாளர் சு. முத்துசாமியுடன் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் உடன் சென்றனர்.

# திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இந்தியா ஆதரவு

திருச்சி. ஏப் 7

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், திமுகவுக்கு வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இந்தியா ஆதரவு தெரிவிக்கிறது. இது குறித்து செய்தியாளர்களிடம் வெல்ஃபேர் கட்சியின் மாநில தலைவர் S.N. சிக்கந்தர் கூறும்போது,




பாசிசம் ஒழிக்கப்பட வேண்டும் ஜனநாயகம் பேணப்பட வேண்டும் சிறுபான்மையினர் உரிமைகள் காக்கப்பட வேண்டும். வெறுப்பு பிரச்சாரங்கள் முறியடிக்கப்பட்டு சமூக நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும். மாநில உரிமைகளை முற்படுத்துதல், பாசிச எதிர்ப்பு, எல்லோருக்கு மான வளர்ச்சியை உறுதி செய்தல், கல்வித்துறையில் முன்னேற்றம், பெண்கள் மேம்பாடு, விளிம்பு நிலை மக்கள் எளிய மக்கள் உயர்கல்வி பெறுவதற்கான பாதைகளை அமைத்தல் போன்ற அடிப்படையான விசயங்களை நாம் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். பாசிச சக்திகளின் அழுத்தங்களுக்கு இடம் கொடுக்காமல் சிறுபான்மையினர் உரிமைகள் காக்கப்படுவதில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படிப்பட்ட நல்லாட்சி தமிழகத்தில் மீண்டும் அமைய வேண்டும். வடநாட்டில் கிறிஸ்தவர்கள் தலித்கள் முஸ்லிம்கள் ஆகியோர் தொடர்ந்து துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படு கின்றன. வாழ்விடங்கள் தகர்க்கப்படுகின்றன . கடைகள் தீ வைத்து கொளுத்தப்படு கின்றன. எதிர்த்துப் போராட்டம் நடத்தினால் அக்கிரமமான முறையிலே கைது செய்யப்பட்டு கொடுமைக்கு உள்ளாக்கப்படு கின்றனர். இத்தகைய விபரீதமான நிலை தமிழகத்திற்கு வராமல் இருக்க வேண்டுமானால் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

கவர்ச்சிகளுக்கு மயங்காமல் போலி வாக்குறுதிகளை புறக்கணித்து ஓட்டளிக்கும் கடமைகளை முறையாக அனைவரும் செய்ய வேண்டும். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்று கூறினார். அப்போது, ஊடக துறை பொறுப்பாளர் நவாஸ்கான், திருச்சி மாவட்ட தலைவர் முஹம்மது யாசீன், செயலாளர் அக்பர், யிவீலீ செயலாளர் பேராசிரியர் கமால், முன்னாள் தலைவர் சிராஜ், மற்றும் நிர்வாகிகள் ரபீக் சாகுல் ஆகியோர் உடன் இருந்தனர்.

# குமாரபாளையம் திமுக வேட்பாளர் எஸ்.பாலு வேட்பு மனுவை தாக்கல் செய்தார்

## தொண்டர்கள் புடை சூழ தீவிர தேர்தல் பிரச்சாரம்..



பள்ளிபாளையம்.ஏப்ரல் 07

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு திமுக வேட்பாளராக போட்டியிடும் எஸ் பாலு தனது வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தல் இந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அடுத்த மாதம் மே நாலாம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

என்னைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள திமுக மற்றும் அதிமுக பாஜக கூட்டணி கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து உள்ள நிலையில், வேப்பமுன்னு செய்யாத வேட்பாளர்கள் இறுதி நாளான நேற்று தங்களின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளராக போட்டியிடும் எஸ். பாலு நேற்று தனது வேட்பு மனுவை குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

வேட்பாளர் எஸ். பாலுடன், முன்னாள் மத்திய அமைச்சர் செ. காந்தி செல்வன், திமுக மாநில விவசாய அணி துணை செயலாளர் வெப்படை செல்வராஜ், குமாரபாளையம் நகர மன்ற தலைவர் சஷ்டி விஜய் கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் இளங்கோவன், தளபதி செல்வம், நாச்சிமுத்து ஆலம்பாளையம் பேரூர் செயலாளர் கார்த்திக்ராஜ், பள்ளிபாளையம் நகராட்சி சேர்மன் செல்வராஜ், உள்பட பள்ளிபாளையம் ஒன்றிய நகர பேரூர் மற்றும் குமாரபாளையம் நகர திமுக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் கூட்டணி கட்சித் தலைவர்கள் இந்த வேட்பு மனு தாக்கல் என்பது உடன் இருந்தனர்.

வேட்பு மனு தாக்கல் முடிந்தவுடன் தொண்டர்கள் புடைசூழ திமுக வேட்பாளர் பாலு தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

# ஈரோடு மொடக்குறிச்சி தொகுதி பாஜக தேர்தல் பணிமனை திறப்பு விழா... வேட்பாளர் கிருத்திகா சிவக்குமார் வெற்றிக்கு உழைக்க உறுதி ஏற்பு..

ஈரோடு. ஏப்ரல். 07

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி பாஜக தேர்தல் பணிமனை நேற்று மொடக்குறிச்சியில் நடைபெற்றது. இதில் வேட்பாளரின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்போம் என உறுதி ஏற்கப்பட்டது.

தமிழக சட்டமன்றத் தேர்தல் வருகின்ற 23ஆம் தேதி நடைபெற உள்ளது. தொடர்ந்து அடுத்த மாதம் மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.




என்னை தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பாஜக வேட்பாளராக ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் கிருத்திகா சிவகுமார் தொகுதி முழுவதும் அதிமுக பாஜக மற்றும் கூட்டணிகட்சிநிர்வாகிகளுடன் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் நேற்று காலை மொடக்குறிச்சியில் தேசிய ஜனநாயக கட்சி சார்பில் தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகா சிவக்குமார் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சிகளில் முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம், முன்னாள் எம்எல்ஏ சிவசுப்பிரமணியம், பாஜக தெற்கு மாவட்ட செயலாளர் எஸ் எம் செந்தில், முன்னாள் எம்பி சின்னையா மொடக்குறிச்சி தொகுதி எம்எல்ஏ டாக்டர் சி. சரஸ்வதி உள்ளிட்ட தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வேட்பாளர் எஸ் கிருத்திகா சிவக்குமார் தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாநகராட்சி பி.பெ.அக்ரஹாரம், மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட் காவல் கண்காணிப்பாளர் கிரண்ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421